பகுதியிலே மக்கள் அதிகமான அளவில் வாழ்ந்து வருகிறார்கள். Floating population அதிக அளவில் உள்ளதால், இப்பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவிப்பிற்கிணங்க, 30 படுக்கைகள் கொண்ட, தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனையாக மாற்ற வேண்டுமாய் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கிக் கேட்டுக்கொண்டு, இந்தத் தொழில் துறை மற்றும் கைத்தறித் துறை மானியக் கோரிக்கைகளில் எனது கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த, எங்களுடைய குடும்ப தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் பதிலுரையை நாளைக்குத் தெளிவாக வழங்குவார்கள்.

## 5. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 31–3–2005 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 31–3–2005, வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2005 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

*31–3–2005 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31–3–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1–45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*– ஏதுமில்லை –*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*144. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை குறித்த புதிய அறிவிப்புகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)*

*145. மானியக் கோரிக்கை எண் 26 – தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)*

*146. தொழில் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)*

*147. தொழில் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)*

*148. மானியக் கோரிக்கை எண் 16 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)*

*149. கைத்தறி மற்றும் துணிநூல் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)*